**மாத்தளை மாநகர சபை**

**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 18 திகதி சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையில் 1.3.3 மற்றும் 1.3.6 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------------

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த பெறுமதி கூட்டிய வரி, முத்திரை வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 992,387 இனால் மிகையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 1995 முதல் 2013 ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் மீளளிப்பு செய்யப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 270,838

ஆகிய ஆதனக் கடன் வட்டி, பயிலுனர் படி, நிலுவை சம்பளம், தற்காலிக ஓய்வூதியம் என்பன முற்கொடுப்பனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 149,800 பெறுமதியான 05 விடயங்கள் பொறியும் பொறித் தொகுதியும் மற்றும் மீளாய்வாண்டின் போது 18 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 646,749 இற்கான 13 பொருட் பதிவேட்டு விடயங்களின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 605,500 கிரயத்தையுடைய டொல்பின் வான் வண்டியின் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 16,293,153 இற்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 229,901 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 62,775,839 ஆக காணப்பட்டதுடன் 05 வருட காலத்தின் மிகைத்த ரூபா 6,244,360 மீதியும் இதில் அடங்கியுள்ளது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 65,956,415 ஆக காணப்பட்டதுடன் 03 வருட காலத்தை மிகைத்திருந்த ரூபா 40,993,675 மீதி இதில் அடங்கியிருந்தது.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டன.

(அ) கூட்டுத்தொகை ரூபா 16,027,967 இற்கான 02 கடன்பட்டோர் விடயங்கள், ரூபா 10,747,587 இற்கான கடன் கொடுத்தோர் மீதிகள், ரூபா 9,442,248 இற்கான செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் ரூபா 545,237 இற்கான இருப்பு பற்றாக்குறை மீதிகள், ரூபா 287,186 இற்கான 04 நிலையான வைப்பு மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 5,236,521 இற்கான இருப்பு ஒன்று, ரூபா 1,503,892 இற்கான நூலகப் புத்தகங்கள் ரூபா 140,400 புகையிரத திணைக்களத்தில் வைப்புக்கள் ரூபா 38,911 இற்கான ஊழியர் பிணை மற்றும் 26,549 இற்கான சிராப்பர் மோசடி செய்த காசு தொடர்பாக உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள், வருடாந்த கணிப்பீட்டு சபை அறிக்கைகள், குறிப்பிட்ட பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் 104 இன் பிரகாரம்

விசாரணை அறிக்கைகள் ஆகியவை சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவ் விடயங்களை திருப்திகரமாகப் பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | மாநகர சபைக் கட்டளை சட்டத்தின் பிரிவு 228 மற்றும் மாநகர சபை துணை விதிகளின் பகுதி | மாநகர சபைக்கு சொந்தமாக காணப்படும் எக்ஸ்கவேடர் இயந்திரத்தினை திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் முறைசாரா விதமாக எக்ஸ்கவேடர் இயந்திரமொன்று சேவையில் ஈடுபடுத்தி சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,427,370 தொகையொன்று வாடகை செலுத்தியுள்ளது. |
| (ஆ) | 1989 ஜனவரி 20 திகதிய இலக்கம் 541∴17 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதி (பகுதி ஏ – (இ) | குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாமல் கூறுவிலைகள் கையில் பெற்று அதன் மூலம் வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 268,790 செலுத்தி 125 பாலம் கொடிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | 2013 மே 08 திகதியில் இலக்கம் சீபீசீ∴சீஎம்சீ∴01∴06∴01∴4-7 கொண்ட மத்திய மாகாண முதலமைச்சரின் கடிதம் | குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கமின்றி மீளாய்வாண்டின் போது ஏப்ரல் முதல் திசெம்பர் வரை காலப்பகுதி தொடர்பாக நகர சபை மந்திரிமாருக்கு பொதுக் கூட்டங்கள் பங்கு பற்றியதற்காக ரூபா 94,000 படியொன்று செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2000 நவம்பர் மாத திகதி குறிப்பிடாத இலக்கம் 7∴1∴2000 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபம் ஏற்பாடுகளுக்காக இணக்கமின்றி நகர செயலளருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 66,061 இற்கான விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,773,038 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,915,559 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 10,857,479 இற்கான முன்னேற்றம் ஒன்றினை காட்டுகின்றது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 வருட காலப் பகுதியில் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றுமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு வருடத்தினதும் மிகையின் செயற்பாட்டு வருமானத்தின் நூற்று விதமாக எடுத்த போது அந்த நூற்று வீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

(ஆ) மொத்தச் செலவுகளை மொத்த வருமானத்தின் நூற்று வீதமாக எடுத்த போது செலவுகள் அதிகரிக்கும் விகிதாசாரம் தொடர்ச்சியாக உயர் பெறுமதி ஒன்றில் காணப்பட்டது.

(இ) தொழிற்பாட்டு மூலதனத்தை கவனத்தில் எடுத்த போது அதை படிப் படியாக குறைத்து மீளாய்வாண்டின் போது ரூபா 24,833,163 இற்கான குறை தொழிற்பாட்டு மூலதன நிலைமையாக மாறியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------

2.3.1 வீதவரி

---------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 21,738,580 ஆக காணப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்து முன் கொண்டுவரப்படும் ரூபா 8,973,463 இற்காக மீதியொன்றும் அதில் அடங்கியுள்ளது.

2.3.2 நீர் கட்டணம்

-------------------

2004 ஆண்டின் போது தேசிய நீர் வளங்கள் சபையிடம் ஒப்படைக்கும் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4,802,812 இற்கான மீதியினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 3,399,832 ஆக காணப்பட்டதுடன் 05 வருட காலத்திற்கு முன்னர் இருந்து முன் கொண்டுவரப்படும் ரூபா 624,442 இற்கான மீதி ஒன்றும் இதில் அடங்குகின்றது.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரை கட்டணமும்

-----------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 2,566,773 தொகையும் மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 15,257,107 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.5 மிகைவிதிப்பு

-------------------

மாநகர சபை கட்டளை சட்டத்தின் (அதிகாரம் 252) இன் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்பின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 45,861 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

1989 ஜனவரி 20 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 541∴17 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட துணை விதி கோவையில் பகுதி ஐஐஐ பந்தி 13 இன் பிரகாரம் மாநகர சபையில் சுதந்திரமான தொடர்ச்சியான அகக் கணக்காய்வு ஒன்று நடத்தப்பட வேண்டும் எனினும், அதற்கு இணங்காமல் இருந்ததுடன் நிதிப்பிரமாணங்கள் 134(2) இன் பிரகாரம் அகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 131 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 775,005 இற்காக நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் ஓஐஓ பிரிவு 6:1 ஏற்பாடுகள் மற்றும் வாடகையாளர் உடன் மேற்கொண்டிருந்த வாடகை உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மாற்றமாக சபைக்கு சொந்தமான ஆறு வீடுகளின் உடன்படிக்கை காலம் முடிவடைந்து ஒரு வருடம் முதல் ஐந்து வருடம் வரையான காலம் வசித்துள்ளார்கள்.

(இ) 1978 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம் கட்டடங்களின் வரைபுகள் அங்கீகரிப்பதற்காக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த விண்ணப்பங்கள் 481 இல் 324 இற்காக அங்கீகாரம் வழங்கியிருந்தது எனினும் இணக்கச் சான்றிதழ் வழங்கியிருந்தது அவற்றில் 27 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே.

(ஈ) மாநகர சபையில் சேவையாற்றிய 16 அலுவலர்களுக்கு 1999 ஆண்டு முதல் மீளாய்வாண்டு அக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 34 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 635,965 இற்கான முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை.

(உ) 1994 ஆண்டு முதல் 2007 வரையான காலப்பகுதியில் 17 சந்தர்ப்பங்களில் வெளிசாராருக்கு பல்வேறு காரணங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 295,671 இற்கான முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை.

(ஊ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 711 வர்த்தக நிலையங்களை இனங்கண்டு கட்டணங்கள் அறவிட்டிருந்த போதும் அவற்றில் 208 இற்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அனுமதிப்பத்திரம்

பெற்றிருக்காத 503 வர்த்தக நிலையங்கள் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

3.3 கருத்து முரண்பாட்டு தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------

சபைக்கு சொந்தமான திய புபுல வில் அமைந்துள்ள காணி புதிய பொலிஸ் கட்டட தொடர்க் கட்டடம் கட்டுவதற்காக 2005 ஆண்டின் போது பொலிஸ் திணைக்கள்த்திற்கு உரித்தாக்கப்பட்டது. அதற்கு பதிலாக மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டிய இரண்டு காணிகளை உரித்தாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.4 இணங் காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX பந்தி 5:4 பிரகாரம் செயற்படாததால் மாநகர சபை செயலாளரிடம் 2010 ஏப்ரல் முதல் மீளாய்வாண்டு ஏப்ரல் வரை வீட்டு வாடகை ரூபா 62,380 தொகை குறைவாக அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) முன்னர் பொலிஸ் நிலையம் இருந்த காணியை மாநகர சபைக்கு மீண்டும் பெறுவதற்காக அக் காணியில் அமைந்து பொலிஸ் வீடுகளில் வதியும் பொலிஸ் அலுவலர்களுக்கு மாநகர சபை நிதியத்தில் இருந்து ரூபா 510,000 செலவிடப்பட்டு வாடகை அடிப்படையில் 04 தனியார் வீடுகள் பெற்றுக் கொடுத்திருந்த போதும் அவர்கள் அவ் வீடுகளில் வதிவதற்கு ஆரம்பித்திருக்கவில்லை.

3.5 பயன்படுத்தப்படாத / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------

கூட்டுப் பெறுமதி ரூபா 5,552,191 இற்கான 14 சொத்து அலகுகள் மற்றும் பெறுமதி கணக்கிடப்படாத 12 சொத்து அலகுகள் பயன்படுத்தப்படாது மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் மாநகர சபைக்கு சொந்தமான 02 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களும் பயன்படுத்தபடாமல் காணப்பட்டது,

3.6 சிக்கனவற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------

மாத்தளை மாநகர சபை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பங்கீடு செய்வதற்காக 2012 ஆண்டின் போது ரூபா 250,454 தொகை ஒன்று செலுத்தி சீருடை பிடவை கொள்வனவு செய்திருந்த போதும் அவை குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கப்படாமையால் ரூபா 157,500 தொகை பெறுமதியாக 375 மீற்றர்கள் 2014 ஆகஸ்ட் 25 திகதி அளவில் களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்டது.

3.7 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

2013 மகநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக 2014 செப்டம்பர் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | நிர்மாண வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | ------------------------------ | ------------------ | ------------------------- |
| | | ரூபா | |
| (அ) | மாத்தளை நாகொல்ல வீதி தொழில்நுட்ப கல்லூரியின் அண்மையில் செல்லும் பாதையை கொங்கிரீட் அச்சு கற்கள் பிடித்து அபிவிருத்தி செய்தல். | 1,198,696 | 475 சதுர மிற்றர் கற்துகல்கள் பரப்பி கொங்கிரீட் அச்சு கற்கள் பரப்பல் தொடர்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 471 சதுர மீற்றர்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்ததுடன் 04 சதுர மீற்றர் இற்காக ரூபா 8,020 மிகையாக செலுத்தியுள்ளது. |
| (ஆ) | மல்வத்தை பாதை 4 வது ஒழுங்கை கொங்கிரீட் அச்சு கற்கள் பிடித்து அபிவிருத்தி செய்தல் | 600,173 | 238 சதுர மீற்றர்களுக்கு கொடுப்பனவு மேற் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 232 சதுர மீற்றர்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் 06 சதுர மீற்றர்களுக்காக ரூபா 12,030 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | ரஜ வீதியில் இருந்து மஹதெவட்ட ஒழுங்கை வரை பாதையை கொங்கிரீட் அச்சு கற்கள் பிடித்து அபிவிருத்தி செய்தல் | 501,009 | 240 சதுர மீற்றர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 218 மீற்றர் மாத்திரம் பூர்த்தி செய்திருத்தல் 22 சதுர மீற்றர்களுக்காக ரூபா 44,110 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | தேவால பாதை கொங்கிரீட் அச்சு கல் பதித்து அபிவிருத்தி செய்தல். | 601,507 | 238 சதுர மீற்றர் கொங்கிரீட் அச்சு கற்கள் பரப்புவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 175 சதுர மீற்றர் கற்கள் பரப்பியிருந்ததால், 63 சதுர மீற்றர்களுக்காக ரூபா 126,315 மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | மாத்தளை ஹரஸ்கம வீதி ரிஷட் பமுனுவ மாவத்தை துனைப் பாதை அச்சுக் கல் பதித்து அபிவிருத்தி செய்தல் | 575,237 | 240 சதுர மீற்றர் அச்சுகல் பரப்குவதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனினும் 232 சதுர மீற்றர் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனவே 8 சதுர மீற்றர்களுக்காக ரூபா 16,040 மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | ஹுஸேன் ஒழுங்கை – 1 டொலே பொது கிணறு அருகில் இருந்து முன்னே உள்ள பாதையை அச்சு கற்கள் பதித்து அபிவிருத்தி செய்தல் | 656,670 | 250 சதுர மீற்றர் கற்கல் பரப்புவதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. பாதை 242.55 சதுர மீற்றர் என்பதனால் சதுர மீற்றர் 7.45 அச்சுக் கல் பதிப்பதற்கான ரூபா 14,937 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | ஹுஸேன் ஒழுங்கை – 1 புகையிரத நிலையத்தின் பின் பகுதியில் இருந்து முன் பகுதி பாதை அச்சு கல் பதித்து அபிவிருத்தி செய்தல். | 648,241 | 245 சதுர அடி அச்சுக்கல் பரப்புவதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சதுர மீற்றர் 218 மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் சதுர மீற்றர் 27 களுக்காக ரூபா 54,135 மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது. |

3.8 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான கட்டடத்தை உர உற்பத்திக்காக 30 வருட காலத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சாட்டப்பட்டு நாளாந்தம் 1.5 தொன் அளவு குப்பைகளை மாநகர சபையில் இருந்து எடுத்துச் சென்று மாநகர சபையைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவரை முழுக் காலத்திற்கும் சேவையில் ஈடுபடுத்தி 2010 திசெம்பர் மாதம் முதல் உர உற்பத்தி விற்பனையின் மூலம் தனியார் நிறுவனம்

இலாபம் உழைத்திருந்த போதும் மாநகர சபைக்கு வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆண்டின் போது தாய்லாந்தை சேர்ந்த ‘‘ஏசியன் இன்ஸ்டிடியுட் ஒப் டெக்னொலொஜி’’ என்ற உயர் கல்வி நிறுவனத்தில் இருந்து பிலான் காபன் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 704,539 நிதி உதவியில் ரூபா 425,000 தொகை ஒன்று மாத்திரம் குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தமையால் பின்னர் செயற்திட்டம் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

3.9 சுற்றாடல் சிக்கல்

------------------------

மாத்தளை மாநகர சபை எல்லையில் நோய்கள் பரவும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டதுடன், சுகாதாரப் பகுதியில் பேணப்படுகின்ற தொற்றுநோய் விபரங்கள் அடங்கிய பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 வருடங்களில் முறையே 21 உம் 70 உம் மற்றும் 48 உம் ஆக டெங்கு நோயாளிகள் இனங்கண்டுள்ளனர்.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

48 செலவு தலைப்புக்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 6,746,800 இற்கான ஏற்பாடுகளில் செலவுகள் ஒன்றும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றுதல் வேறு 105 செலவு விடயங்களின் ஏற்பாடுகள் மற்றும் செலவுகள் இடையே நூற்றிற்கு 10.7 முதல் நூற்றிற்கு 98.8 வரை வீச்சில் முரண்கள் காணப்பட்டமையும், 07 வருமான தலைப்புக்களில் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே நூற்றிற்கு 73 முதல் நூற்றிற்கு 100 இடையே வீச்சில் முரண்கள் காணப்பட்டமையும், மேலும் 4 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானத்தில் எதுவித பணமும் உழைத்திருக்கவில்லை. எனவே, பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

------------------------------------------------------------------------------------------------------------

சபைக்கு சமர்பித்திருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 10 ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாய்கல்களின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 21,706,937 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பாதீட்டு கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) களஞ்சிய கட்டுப்பாடு